# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்)

**இலங்கைக் கணனிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலங்க சுமதிபால அவர்களால் 2012, மார்ச்சு மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2012, மார்ச்சு மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 165 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 006695 -350 (2012/03)

## இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்)

### இலங்கைக் கணனிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“இலங்கைக் கணனிச் சங்கம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டமானது, 2012 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கைக் கணனிச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “சங்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைக் கணனிச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “இலங்கைக் கணனிச் சங்கம்” என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

2-PL 006695 -50 (2012/02)

**3**. கூட்டுத்தாபனம் எப்பொதுக் குறிக்கோள்களுக்காக உருவாக் கப்படுகின்றதோ அப்பொதுக் குறிக்கோள்கள் பின்வருவன வாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

(அ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியலில் ஈடுபட்டுள்ள உயர்தொழிலர்களுக்கு ஒழுங்கமைப் பொன்றை ஏற்பாடு செய்தலும் உயர்தொழில் சார்ந்த அதன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் இத் தொழிலில் அதியுயர் தொழில்சார் நியமங்களைப் பேணி வளர்த்தலும் பேணுதலும் ;

(ஆ) பட்டய உறுப்பாண்மையை அங்கீகரித்தலும் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்தால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு வகுப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களிடையே அதனை உரித்தாக்குதலும் அளித்தலும் ;

(இ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியலின் கற்கையையும் தொழில் முறையையும் ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும் அறிவை மேம்படுத்துதலும் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு வசதியளித்தலும் பொதுமக்களின் நலனுக்கு அதன்கண் தொழினுட் அறிவைப் பெறுதலும் இடைமாற்றம் செய்தலும் ;

(ஈ) பொருளாதார மற்றும் நிதிசார்ந்த செயற்பாடுகளை ஊக்குவித்தலும் ஒழுங்கு செய்தலும் அவற்றில் ஈடுபடு தலும் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் நிதியளிப்பு செய்யும் நோக்கத்திற்கு இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள் ளுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்குத் தகைமை யளிப்பதற்கான பரீட்சைகளை நடத்துதலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியலில் ஈடு பட்டுள்ள ஆட்களின் தகுதியை சோதித்தலும் சான்றிதழ்கள் வழங்குதலும் ;

(ஊ) அதன் உயர்தொழில்சார் தகுதிக்குட்பட்ட துறைக்குள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் முகாமை செய்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனம் எந்தத் தொழிலைக் கொண்டு நடாத்த அல்லது எந்தத் தொழிலில் ஈடுபட விரும்புகின்றதோ அந்த ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்தும் அல்லது அதில் ஈடுபடுள்ள எவரேனும் ஆளுடன் அக்கறையின், ஒத்துழைப்பின், கூட்டுத்தொழில் முயற்சிகளின், இருவயினொத்த சலுகையின் ஐக்கியத்திற்கு அல்லது வேறு வகையில் ஏற்பாடுகள் செய்து கொள்ளல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்கையில் இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள இதனையொத்த உயர்தொழில்சார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல் ;

(2) இப்பிரிவின் ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில் அத்தகைய நடைமுறைப்படுத்துகை சாதி, மத, மொழி, குல, பால்நிலை, அரசியல் அபிப்பிராயம் அல்லது பிறந்த இடம் என்பது உறுதிப் படுத்தப்படுதல் வேண்டும் அல்லது அத்தகைய ஏதுக்களின் ஏதேனுமொன்றின் அடிப்படையில் பாகுபாடு எதுவுமின்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தலைவரையும் துணைத் தலைவரையும் செயலாளரையும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட வேறு பதவி தாங்குநர்களையும் கொண்ட நிறைவேற்றுப் பேரவை ஒன்றினால் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க (இச்சட்டத்தில் “பேரவை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாவது பேரவை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற சங்கத்தின் நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்களைக் கொணடிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றுதல் அல்லது வேறுவகையில் பாராதீனப்படுத்தல் பாரபந்தத்திற்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாக விருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது நிறுவனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர்மூலமாகவோ செய்துகொள்ளுதலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) நன்கொடைகளையும் கொடைகளையும் விருப்பாவணக் கையளிப்புகளையும் காசாகவாயினுஞ்சரி அல்லது பொருளாகவாயினுஞ்சரி ஏற்றுக்கொள்வதற்கு ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் ஏதேனும் வங்கியில் நடைமுறை, வைப்பீட்டு மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பேணுவதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தினால் நடத்தப்படும் ஏதேனும் பரீட்சைக்கு நியாயமானதென சங்கம் கருதக்கூடியவாறு கட்டணங்கள் அறவிடுவதற்கும் ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த உறுப்பாண்மைக்கு ஆட்களை அனுமதிப்ப தற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் பணத்தைக் கடனெடுப்பதற்கு அல்லது முதலீடு செய்வதற்கும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவை யாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த் தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாப னத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டத்திலும் சமுக மாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராக விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாப னத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்கள் பதவி விலகல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) சங்கத்தால் நடாத்தப்படும் ஏதேனும் பரீட்சைக்கும் ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த உறுப்பாண்மைக்கும் ஆட்களை அனுமதிப்பதற்கும் நியாயமானதென சங்கம் கருதக்கூடியவாறு கட்டணங்களின் அளவுத் திட்டத்தைத் தீர்மானித்தல் ;

(இ) பதவி தாங்குநர்களைத் தெரிவுசெய்தல், அவர்கள் பதவி துறத்தல், பதவியை வறிதாக்கல் அல்லது பதவியி லிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(உ) சபையின் கூட்டங்களில் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், கூட்டங்களை நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் நோக்கங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அதன் நிதியங்களின் கட்டுக் காப்பும்;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாக நிறைவேற்றுவதற்கு குழுக்களை நியமித்தல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் உறுப்பினர்களின் தகைமைகளும் தகைமையீனங்களும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, கைமாற்றம், நன்கொடை, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்றவாறு கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செயதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் தவிசாளரின் அல்லது துணைத் தவிசாளரினதும் பேரவையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பேரவையின் வேறொரு உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

சங்கத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவையுமான தனிசுகள்.

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாக வுள்ள எல்லாத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் அல்லது பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது இச்சட்டத்தின் வேறேதேனும் நோக்கத்திற்கு உறுப்பாண்மை கட்டணத்தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

பணங்களையும் ஆதனங்களையும் பிரயோகித்தல்.

**12**. எத்தன்மையிலாயினும்சரி பெறப்பட்ட கூட்டுத்தாபனங்களின் பணங்களும் ஆதனமும் இதனகத்து எடுத்துக் காட்டப்பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் என்ற வகையில் அல்லது எத்தன்மைத்தாயினுமான வேறுவகையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் ஆகாது.

**13.** கூட்டுத்தாபனம், கொள்வனவு, கொடை, நன்கொடை, மரணசாசனக் கையளிப்பு என்றவகையில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக்கொண்டதும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் அவற்றின் விதிகளின் மூலம் தடைசெய்கின்றதுமான கழகத்திற்கு அல்லது கழகங்களுக்கு கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது அல்லது அதற்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம் கையுதிர்க்கப்பட முடியவில்லையாயின், அத்தகைய ஆதனம் அல்லது அதன் பாகம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படும் எவையேனும் தருமக் குறிக்கோள்களுக்குப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கப்படுவதன் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

***16***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்